**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 11.09.2025

**அசல் வழக்கு எண்.278/2023**

**வா.சா.1 – சக்திவேல், த/பெ.மணி**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் வழக்கினை படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். வழக்கில் சுப்பிரமணி பதில் தாக்கல் செய்துள்ளார் படித்து பார்த்தீர்களா என்றால் படித்து பார்க்கவில்லை. என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் என்னுடைய சொத்து என்னுடைய அனுபவத்தில் இருக்கிறது என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் வழக்கு சொத்தினை மூன்று பட்டியல் சொத்தாக காட்டி உள்ளீர்கள் என்றால் சரிதான். முதல் பட்டியல் சொத்து நீங்கள் கிரயம் வாங்கிய நன்செய் நிலம் என்றால் சரிதான். இரண்டாவது பட்டியல் சொத்து உங்கள் மனைவி பெயரில் உள்ள கிராம நத்த சொத்து என்று சொன்னால் சரிதான். அவர் பேரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். மூன்றாவது பட்டியல் சொத்து அண்ட பள்ளம் என்கிற பொறம்போக்கு சொத்து என்றால் அது என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது. அது பொறம்போக்கு இடம் என்றால் சரிதான். வழக்குடன் தாக்கல் செய்த வரைபடத்தில் 3 செட்யூல் சொத்துக்களை குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் ஐட்ட சொத்துக்கு நீங்கள் விற்பனை பத்திரம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். இரண்டாவது ஐட்டத்திற்கு உங்கள் மனைவி பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். மூன்றாவது ஐட்டம் சொத்துக்கு உங்கள் அனுபவத்தில் இருக்கிறது என்று காட்டுவதற்கு பதிவு செய்யப்பட்ட பத்திரம் பட்டா சிட்டா அடங்கல் அனுபவ சான்று ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. தண்ட தீர்வை ஏதேனும் கட்டினீர்களா என்றால் கட்டவில்லை. மூன்றாவது ஐட்டம் சொத்துக்கு நீளம் அகலம் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். நீளம் அகலம் குறிப்பிட்டுள்ளீர்கள் அதனை எந்த ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிட்டீர்கள் என்றால் ஆவணங்கள்

எதுவும் இல்லை. அந்த அளவுகள் நீங்களாகவே அளந்து குறிப்பிட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் மனு ஏதேனும் நீதிமன்றத்தின் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் மூன்றாவது ஐட்டம் சொத்தை அனுபவிக்கவில்லை அவ்வாறு அனுபவித்து வந்து இருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் தாக்கல் செய்த வரைபடத்தில் அண்ட பள்ளம் என்பது இரண்டு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் சொல்லி உள்ள அண்ட பள்ளம் எந்த இடத்திற்கான அண்ட பள்ளம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அளவீடுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கடந்த 03.04.2022 அன்று சாலவாக்கம் காவல் நிலையத்தில் நீங்கள் ஒரு புகார் அளித்தீர்கள் என்றால் சரிதான். அது வாதி தரப்பு சான்றாவணம் 3 ஆக குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியும். அந்த புகாரில் சுப்பிரமணி மற்றும் அவரது மகன்கள் எபின் மற்றும் விமல், ஜெயராஜ், மனோகரன் ஆகியோர் அனுபவத்தில் இடையூறு செய்வதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த புகாரில் குணசேகரன் தந்தை பெயர் நடராஜன் என்பவரிடமிருந்து சர்வே எண் 235/7 சி யில் அடங்கிய 58 செண்ட் சொத்தில் இடையூறு செய்கிறார்கள் என்று புகார் கொடுத்தீர்கள் என்று சரிதான். அந்த சொத்து வழக்கில் முதல் பட்டியல் சொத்து என்றால் சரி தான். அந்த புகாரின் இரண்டாவது மற்றும் மூன்றாவது பட்டியல் சொத்து குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுகின்ற வா.சா.ஆ.3 ல் அவ்வாறு உள்ளது என்றால் சரிதான். புகாரின் பேரில் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். இரண்டு குடும்பத்தார் இடையே பிரச்சனை செய்யக்கூடாது என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். நீங்கள் சமரச உடன்படிக்கை எழுதிக் கொண்டீர்கள் என்றால் சரிதான். புகாரில் கொடுக்கப்பட்ட பட்டியல் ஏ சொத்து குறித்து சமரச உடன்படிக்கை எழுதப்படவில்லை புகாரில் குறிப்பிடப்படாத பட்டியல் சி சொத்து குறித்த நிலத்தை பற்றி சமரச உடன்படிக்கை எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகவே புகாரில் குறிப்பிடப்பட்ட சொத்தும் சமரச உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட சொத்தும் வெவ்வேறானவை என்றால் சரி இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சமரசம் ஏற்பட்ட பின்பும் மீண்டும் வழக்கு சொத்தில் பிரச்சனை செய்கிறார்கள் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். எந்த தேதி மாதம் வருடம் இடையூறு செய்தார்கள் என்று நீங்கள் குறிப்பிடவில்லை என்றால்

சரிதான். உங்கள் வழக்கில் தொடர்ச்சியான வழக்கு மூலம் இல்லை என்று சொன்னால் சரியில்லை. சமரச உடன்படிக்கையில் பிரதிவாதி சுப்பிரமணி கையொப்பம் போட்டு உள்ளாரா என்றால் அவர் போடவில்லை அவர் மகன் எபின் போட்டுள்ளார். அவரை இந்த வழக்கில் நீங்கள் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். முதல் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு மூலம் இல்லை என்றால் சரி இல்லை. வழக்கின் சொத்து மதிப்பு ரூபாய் ஒரு லட்சத்து ஒரு ஆயிரம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அதை எப்படி கணக்கிட்டீர்கள் என்று வழக்கு மூலத்தில் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியில்லை. ஆகவே இந்த நீதிமன்றத்திற்கு வழக்கை விசாரிக்க அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. வழக்கில் சொல்லி உள்ள சொத்து விவரத்திற்கும் வரைபடத்தில் உள்ள சொத்து விவரத்திற்கும் வேறுபாடு உள்ளது ஆகவே நீங்கள் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரி இல்லை. வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புனிதா செல்வகுமார் என்கிற சொத்தை தற்பொழுது யார் வாங்கி உள்ளார்கள் என்றால் எபின் வாங்கியுள்ளார். தற்பொழுது அவர் நிலத்திற்கு செல்ல வேண்டுமாயின் அண்ட பள்ளம் வாயிலாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். ஆகவே நீங்கள் மட்டும் அண்ட பள்ளத்திற்கு உரிமையும் சுவாதீனமும் கோர முடியாது என்றால் சரி இல்லை. முதல் மற்றும் இரண்டு ஐட்ட சொத்தில் உங்களுக்கு பிரதிவாதிகள் இடையூறு செய்ததில்லை என்றால் சரியில்லை. மூன்றாவது ஐட்ட சொத்திற்கு நீங்கள் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை ஆகவே மூன்று ஐட்டம் சொத்தில் இடையூறு செய்யக்கூடாது என்கிற பரிகாரம் உங்களுக்கு வழங்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி இல்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.